# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2016 செப்டெம்பர் மாதம் 20 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** தவிசாளரின் அறிவிப்புக்கள்

**II.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

**III.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

**IV.** மனுக்கள்

**V.** கேள்விகள

**01.** **கௌரவ கே.டி. அறுணதீபால் உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல், சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பானஅமைச்சரிடம்கேட்பதற்க:** **(□/vi (1)16/71)**

அ.
- i. மேல் மாகாணத்தின் பிரதம செயலாளர் மற்றும் அமைச்சின் செயலாளர்கள் சபையின் மூலம் செலவு செய்து 2014 ஏப்ரலின் பின்னர் வெளிநாட்டுச் சுற்றுலாக்களில் கலந்து கொண்டு உள்ளனரா ?
- ii. ஒவ்வொருவரும் பங்குபற்றிய வெளிநாட்டுச் சுற்றுலாக்களின் எண்ணிக்கை எவ்வளவு ?
- iii. எந்த நாடுகளுக்காக ?
- iv. சுற்றுலாவில் ஈடுபட்ட நாட்களின் எண்ணிக்கை எத்தனை ?
- v. அதன் மூலம் சபை பெற்றுக் கொண்ட பலாபலனை வெவ்வேறாகக் காட்ட முடியுமா ?
- vi. ஒவ்வொரு சுற்றுலாவுக்காகவும் செலவு செய்த நிதி எவ்வளவு ?
- vii. எந்தச் செலவுத் தலைப்புக்களின் கீழ் ?
- viii. சுற்றுலாவில் மேலே கூறிய தாபனத் தலைவர்களுக்கு மேலதிகமாக பங்குபற்றியவர்கள் யார் ? அதற்காகத் தெரிவு செய்த முறை மற்றும் மேற்கொண்ட செலவு எவ்வளவு ?

ஆ.
- i. முதலமைச்சர் உள்ளிட்ட தற்போதைய அமைச்சரவை மாகாண சபையின் மூலம் செலவு செய்து வெளிநாட்டுப் பயணங்களில் ஈடுபட்டு உள்ளனரா ?
- ii. ஒவ்வொருவரும் பங்குபற்றிய வெளிநாட்டுச் சுற்றுலாக்களின் எண்ணிக்கை எவ்வளவு ?
- iii. எந்த நாடுகளுக்காக ?
- iv. சுற்றுலாவில் ஈடுபட்ட நாட்களின் எண்ணிக்கை எத்தனை ?
- v. அதன் மூலம் சபை பெற்றுக் கொண்ட பலாபலனை வெவ்வேறாகக் காட்ட முடியுமா ?
- vi. ஒவ்வொரு சுற்றுலாவுக்காகவும் செலவு செய்த நிதி எவ்வளவு ?
- vii. எந்தச் செலவுத் தலைப்புக்களின் கீழ் ?
- viii. சுற்றுலாவில் மேலே கூறிய தாபனத் தலைவர்களுக்கு மேலதிகமாக பங்குபற்றியவர்கள் யார் ? அதற்காகத் தெரிவு செய்த முறை மற்றும் மேற்கொண்ட செலவு எவ்வளவு ?

**02.** **கௌரவ கே.டி. அறுணதீபால் உறுப்பினரினால் வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2016.08.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(□/vi (1)16/72)**

அ.
- i. 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 யூன் வரையிலான காலத்தினுள் மூடப்பட்டிருந்த மற்றும் நட்டமடைந்த கூட்டுறவு பிரதேசங்கள் / கிராமிய வங்கிகள் / சூப்பர் விற்பனை நிலையங்கள் என்ற ரீதியில் மூடப்பட்டமைக்கு காரணமான விடயங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு ஏதாவது நடவடிக்கை ஒன்று எடுக்கப்பட்டுள்ளதா ?
- ii. அது என்ன நடவடிக்கை ?
- iii. வெளிப்படுத்திக் கொண்ட காரணம் என்ன ?
- iv. அந்த வெளிப்படுத்திக் கொள்ளப்பட்ட காரணங்களின் கீழ் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை ?

ஆ. மேற் கூறப்பட்ட வினா இல அ(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தாபனங்களுள் கூட்டுறவு நியதிச் சட்டத்திற்கு மற்றும் விதிகளுக்கு இணங்க புலன் விசாரணைக்காக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ள தாபனங்களின் எண்ணிக்கை எவ்வளவு ? அவை யாவை ?

இ. i. இவ் வருடத்தின் அவதானிப்புக்கு இணங்க மூடப்பட உத்தேசித்துள்ள பிரதேச / வங்கி / சூப்பர் விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றனவா ? அவை எவை ?

ii. அந்த இனங்காணப்பட்ட தாபனங்களை உரிய நிலைக்கு கொண்டு வர முடியாதவிடத்து அவ்வாறு வர முடியாமைக்கு உரிய காரணம் என்ன ?

iii. அதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள, மற்றும் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் எவை ?

iv. அவ்வாறு இனங்காணப்பட்ட நபர்கள், பெயர் மற்றும் பதவிகளின் அடிப்படையில் யார் ?

ஈ. i. மேலே பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் தொடர்பாக நாட்டின் பொதுச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா ? அது யார் தொடர்பானது ?

ii. அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின் அதற்குக் காரணம் என்ன ?

**03.** **கௌரவ லலித் எல்லாவல உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல், சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(□/vi (1)16/83)**

அ. பண்டாரகம பிரதேச சபையின் மகா பெல்லன இறங்கு துறை வீதியில் வீதிக்கும், மற்றும் அருகில் இருக்கும் மதிலுக்கும் பாதிப்பு ஏற்படுமாறு பண்டாரகம பிரதேச சபையின் மூலம் மண் வெட்டுவது இடம் பெற்று உள்ளது என்பதனை அறிவீர்களா ?

ஆ. அச் செயற்பாட்டின் போது உரிய வீதிக்கும் மற்றும் மதில்களுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புத் தொடர்பாக பிரதேச சபை மூலம் ஏதாவது நடவடிக்கை ஒன்று எடுக்கப்பட்டுள்ளதா ?

இ. இல்லையாயின் ஏன் ?

ஈ. அந்த வீதியில் இருந்து எடுக்கப்படும் மணல் விற்கப்பட்டு உள்ளதா ?

**04.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**

**(□/vi (1)16/84)**

அ. உங்களது அமைச்சுக்கு உரியதாக கணக்காய்வாளரினால் WP/CB/G/ED/2015/3/15/13 ஆம் இலக்க 2015 நவம்பர் 03 ஆந் திகதி கணக்காய்வு விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

ஆ. அப்படியாயின் அது எந்த விடயத்தினை அடிப்படையாகக் கொண்டது ?

இ. கணக்காய்வு அறிக்கையின் சிபாரிசு என்ன ?

ஈ. பாடசாலை ஒன்றில் 10 வருடங்களை விட அதிக காலத்தினை பூர்த்தி செய்த ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய அதன் மூலம் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதா ?

உ. மேலே உள்ள சிபாரிசு நடைமுறைப்படுத்திய போது அது சில ஆசிரியர்களுக்கு மட்டும் உரியதாகுமாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்ற தகவல் உண்மையானதா ?

ஊ. அப்படியாயின் அந்த கணக்காய்வு விசாரணைக்குரிய சிபாரிசினை உரிய எல்லா ஆசிரியர்களுக்கும் நடைமுறைப்படுத்துவீர்களா ?

**05.** **கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**

**(□/vi (1)16/85)**

அ. கம்பஹா மாவட்டத்தில் ஹேனகம மகா வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலை ஒன்று காணப்படுகின்றதா ?

ஆ. i. அந்த வித்தியாலயத்தின் தற்போதைய அதிபரின் பெயர் என்ன ?

ii. அந்த பதவியில் நியமிக்கப்படுவதற்கு அவரது தகைமைகள் போதுமானவையா ?

இ. அப் பாடசாலையில் 10 ஆம் தரத்தில் எத்தனை வகுப்புக்கள் காணப்படுகின்றன ?

ஈ. அந்த 10 ஆம் தரத்தில் ஒவ்வொரு வகுப்புக்களிலும் தற்போது உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

**06.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு**

:

(□/vi (1)16/86)

அ. மேல் மாகாணத்தினுள் தேசிய ஆசிரிய இடமாற்ற கொள்கைக்கு இணங்கவா ஆசிரிய இடமாற்றம் நடைபெறுகிறது ?

ஆ. அந்த இடமாற்றங்கள் ஒழுங்காகவும் வெளிப்படையாகவும் மேற்கொள்ளப்பட்டு உள்ளன என்பதனை உறுதிப்படுத்துவீர்களா ?

இ. மேல் மாகாணத்தினுள் மற்றும் வலையத்தினுள் ஆசிரிய இடமாற்றம் மேற்கொள்ளும் அதிகாரம் எவரிடம் கையளிக்கப்பட்டு உள்ளது ?

ஈ. அதற்கு இணங்க பிரதி கல்விப் பணிப்பாளர்களுக்கு இடமாற்றம் செய்யும் அதிகாரம் எவ்வாறு உரித்தாகின்றது ?

உ. பிலியந்தல கல்வி வலையத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தமது அதிகாரத்தினை மீறி இடமாற்ற நடவடிக்கையை மேற்கொண்டு உள்ளனர் என்பதனை அறிவீர்களா ?

ஊ. இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை என்ன ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ இப்திகார் ஜெமீல் மரிக்கார் அவர்கள்**

மேல் மாகாணத்தில் பரம்பரையாக வாழும் மக்களின் பாரம்பரிய காணியை குடும்பங்களுக்கு இடையே பாரம்பரிய உரிமையின் கீழ் பகிரும் போது ஒரு நபருக்கு காணி உரிமையில் 4, 5 பேர்ச்சுக்கள் என்ற முறையில் குறையும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

தற்போதைய உள்ளூராட்சித் தாபனங்களின் காணித் துண்டுத் திட்டம் மற்றும் வீட்டுத் திட்டத்தினை திட்டமிடும் போது பிரதேச சபையின் ஆகக் குறைந்த காணி 10 பேர்ச் ஆகவும் மாநகர சபையின் மற்றும் நகர சபையின் பேர்ச்கள் 6 ஆகவும் கருதி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இதன் காரணமாக மேலே கூறப்பட்ட பாரம்பரிய காணி உரிமையாளர்களுக்கு 4,5 பேர்ச் காணிக்கு உரிய வரைபடத்தினை அங்கீகரித்துக் கொள்வதில் காணப்படும் பிரச்சினையை ஆராய்ந்து பாரத்து பாரம்பரிய காணி உரிமையாளர்களின் வீட்டு வரைபடம் மற்றும் காணித்துண்டினை அங்கீகரிக்கும் போது காணியின் பரப்பினை 04 பேர்ச் இற்கு குறைவாக வருமாறு கருதி திட்டத்தினை அங்கீகரிக்க வேண்டும் என இந்த மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது.

(பி/vi(1)15/06)

## X. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2016.09.07 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.